மறந்தும் பிறன் கேடு சூழற்க; சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

# குறள் நெறி

மலர் 1 ; திருவள்ளுவராண்டு 1995 தை 19 (1-2-64) ; இதழ் 2

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.

## வரலாற்றை மறைத்தும் வாழவேண்டுமா ?

இந்தியத்துணைக்கண்டத்தில் வாழும் பலமொழி இனங்களுள் தமிழினமே தொன்மை வரலாற்றுச் சிறப்பும் உயர் தனிச் செம்மொழியும் கொண்டுள்ளது. தமிழோடு உறழ் தரக்கூடிய ஆரியம் உலக வழக்கு அற்ற தொன்ருயிருத்தலின் அதுபற்றி இங்கு ஆராய்ச்சியின்று அது தவிர்த்த ஏனைய மொழிகள் எல்லாம் எல்லாவகையானும் தமிழுக்குப் பிற்பட்டனவே. இந்திய மொழிகளின் தாய் எனக் கருதத்தக்கது தமிழே யாகும். ஆயினும் இவ்வுண்மையைப் பலர் இன்னும் அறிந்திலர். கற்றவர்கள் என்று கருதப்படுவோருள் பலர் தமிழ்மொழி தமிழ்நாடு பற்றிய உண்மை வரலாறுகளை அறியாதவர்களாகவே உள்ளனர். அவர்கள் அங்ஙனம் அறியாமலிருப்பது அவர்கள் பிழையன்று. அவர்கள் கற்ற நூல்கள் தமிழகத்தின் உண்மை வரலாற்றை உரைத்தில. இப்பொழுது தான் தமிழகத்தின்உண்மைவரலாறுபொய்ம்மைஇருட்படலம் கிழித்து செவ்விள ஞாயிறுபோல் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

உண்மை வரலாற்றை அறிவதில் ஆர்வம் தலைப்பட்டுள்ள இற்றை நாளில் 'தேசீய ஒருமைப்பாடு' எனும் காரணம் காட்டித் தமிழக உண்மை வரலாற்றைத்தமிழர்களே அறியாதவாறு செய்ய முற்படுகின்றனர் சிலர். மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள தலையாய வேறுபாடுகளில் ஒன்று தம் பழம் வரலாற்றை யறிதலேயாகும். நாகரிகத்தால் சிறந்து பண்பாட்டால் உயர்ந்துள்ள மக்களுக்கே பழைய வரலாறுகளை அறியும் வாய்ப்பும் வசதியும் இருக்கக்காணலாம்

தமிழர்கட்கு வரலாற்றுத் தொன்மை உண்டு. ஆகவே அவர்கள் தம் வரலாற்றை அறிவதில் ஆர்வம் காட்டுவதில் தவறென்ன? தமக்கென வரலாற்றுச்சிறப்பு இல்லாதார் வரலாற்றுச் சிறப்புடையோரைக்கண்டு பொருமைப்படுவதிலும் அப் பொருமையால் அவ்வரலாற்றை மறைக்க முயல்வதிலும் பொருள் உண்டு. ஆனல் வரலாற்றுக்குரியோரே "வரலாற்றைப் படிக்காதே; படித்தால் உன் நாட்டின் மீது மிகுந்த பற்று வந்துவிடும்; அப்பற்ருல் ஒற்றுமைக்கு ஊறு உண்டாகும்" என்று கூறுவதை என்னென்பது? அவர்கள் உண்மை வரலாறு தெரியவேண்டாம் என்ருல் கல்விகற்பது எற்றுக்கு? கல்வித்துறையும் கல்வியமைச்சரும் வேண்டாமே

நம் வரலாற்றை நாம் அறியாதும், அறிந்தும் பிறர்க்கு உரையாதும், செவிடர்களாய்க் குருடர்களாய் ஊமைகளாய் வாழ்வது எற்றுக்கு?

நம் மாநில முதல் அமைச்சர் (கல்வி அமைச்சர்) சட்டமன்றில் "மாநிலப் பற்றுக்கு முதன்மை கொடுக்கும் வரலாறுகளைக் கற்றல் கூடாது" என்று கூறியதாகச் செய்தித் தாட்களில் வெளிவந்துள்ளமை வியப்பையும் வருத்தத்தையும் தருகின்றது. நம் மாநிலம் பழைய வரலாறு பெற்றிருப்பது தவரு? மக்கள் தோற்றம் ஏற்பட்டதே தமிழ் மாநிலத்தில் தான் என்று கூறுகின்ருர்களே? அதை அறிவது தவரு? இமயம் முதல் குமரி வரை ஒருகாலத்தில் தமிழ் வழங்கியிருத்தல் கூடும் என்கின்ருர்களே அதைத் தெரிவது தவரு?

இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் சேக்கிழார் மரபினர் எனப் பலரும் கூறக் கேட்டுள்ளோம். அமைச்சர் அவர்களும் அவ்வாறு கூறக்கேட்பதில் பெருமையும் உவகையும் கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமின்று. இனி அவ்வாறு கூறவேண்டாம் என்று தடுத்துவிடுவார்களே என்று கருத வேண்டியுள்ளது. நாட்டின் தொன்மை தெரிவது தவறு என்ருல் நம் தொன்மை தெரிவதும் தவறுதானே. நமக்கு உயர்வு தரும் நமது பழைய வரலாற்றை மறைத்துவிட்டு, மறந்து விட்டு நாம் எதற்காக வாழவேண்டுமோ? வரலாறு மறந்த வாழ்வு வரலாற்றில் இடம் பெருது என்பது உலகம் அறிந்த உண்மை.

## தமிழ்க்கழகங்கள்

இன்று 'தமிழ்' என்ருலே அஞ்சுகின்றனர் சிலர். 'தமிழ்' நாட்டு ஒற்றுமைக்கு மாறுபட்டது என்றுகூடக் கருதுகின்றனர். இதழ்கள் வெளியிடுவதற்குச் சிலர் தமிழின் தொடர்பாகத் தமிழ் மலர், தமிழ் இன்பம் என்பன போன்ற பெயர்களை அறிவித்து ஒப்புதல் கேட்டபோது இந்திய யரசினர் மறுத்துவிட்டனராம் தமிழ்த் தொடர்பற்ற வேறு பெயர்களையே சூட்டிக் கொள்ளுமாறு செய்துள்ளனராம் - இச்சூழ்நிலையில் உலகத் தமிழ்க் கழகமும், இந்தியப் பல் தமிழ்க்கழகமும் தோன்றியுள்ளன. இக் கழகங்கள் தமிழின் வரலாற்றையும் இயல்பையும் இந்தியர்களும் உலக மக்களும் அறியச்செய்யும் தொண்டில் அயராது ஈடுபடுதல் வேண்டும்.

தில்லியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகமும், காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியப் பல்தமிழ்க்கழகமும் நெடிது நிலைத்து என்றும் உள தென் தமிழை இயம்பி இசைகொண்டு வாழ்வதாக

வாழ்க தமிழ். வளர்க தமிழ்க்கழகத் தொண்டுகள்.

———

## அன்பர்கள் நினைவுக்கு

"குறள் நெறி" இதழ்பற்றிய கடிதங்களை "குறள் நெறி மதுரை-6" எனும் முகவரிக்கே விடுக்குமாறு வேண்டுகின்ருேம்.

குறள் நெறிக்குக்கட்டுரைகள் திருக்குறளைப் பற்றித்தான் இருக்கவேண்டும் எனச் சிலர் எண்ணுகின்றனர் என அறிகின்ருேம். குறள் நெறி இதழ்க்கு மக்கள் வாழ்வியல்பற்றிய எல்லாப் பொருள்கள் பற்றியும் இனிய தூய எளிய தமிழில் எழுதப்படுபவன வரவேற்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

கட்டுரைகளும் பாடல்களும் நிறைய வந்துள்ளன அவை ஆராயப்பட்டுச் சிறந்தனவாய் இருப்பன அவ்வப்போது வெளியிடப்படும். திருக்குறள் கருத்தை விளக்கும் சிறு கதைகள் வரவேற்கப்படுகின்றன.

இதழ் ஆக்கம்பற்றிய கருத்துரைகளை அன்பர்கள் அவ்வப்போது எழுதலாம்.

— ஆசிரியர்.

## குறள்நெறி இயக்கம்

திருக்குறள் நெறியில் மக்கள் வாழ்வரேல் மக்களாட்சி சிறப்புற்று "எல்லோரும் ஓர்குலம்" எனும் ஒருமைப்பாட்டுடன் அனைவரும் இன்ப வாழ்வினை எய்துதல் கூடும் ஆகவே குறள் நெறியைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு "குறள் நெறி யியக்கம்" தோன்றியுள்ளது, குறள் நெறியை ஏற்று வாழ்வோரெல்லாரும் குறள் நெறி யியக்கத்தின் உறுப்பினராவார், இவ்வியக்கத்தின் உறுப்பினராகிக் குறள் நெறியை மக்களிடையே சொல்லாலும் செயலாலும் பரப்ப விரும்புவோர்

**திருக்குறள் நெறியில் வாழ்வதற்கு உறுதி பூண்டுள்ளேன்**

என உறுதிமொழி கூறிக் கையெழுத்திட்டு முகவரியை அறிவிப்பின், **குறள் நெறியில் வாழ்வோர்** எனும் தலைப்பில் 'குறள் நெறி' யிதழில் தொடர்ந்து வெளியிடப்படும்.

" குறள் நெறி பரவின் குடியரசு ஓங்கும்".

செயலாளர், "குறள்நெறி இயக்கம்"
சி. 17, திருநகர்
மதுரை-6.

# திருக்குறள் ஓதுவோம்

# நம்மைச் சுற்றி

## மதுரையில் பல்கலைக் கழகம் :

தமிழ்நிலைபெற்றமதுரை, தமிழ்வளர்ச்சிக்கும் கலை நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் நிலைக்களனாய் இருந்தது வரலாறு கூறும் உண்மை. இச்சீர்த்திமிக்க மதுரைமாநகரமே தமிழ் மாநிலத்தின் தலைநகராகவும் இருக்கத்தகுதியுடையது. பண்டைத்தமிழ நாட்டில் உள்நாட்டில் ஒரு தலைநகரமும் கடற்கரையில் ஒரு தலைநகரமுமாக இரு தலைநகரங்கள் இருந்தமை போல் இன்றும் தமிழ் மாநிலத்திற்குக் கடற்கரைத் தலைநகராகச் சென்னையையும் உள்நாட்டுத் தலைநகராக மதுரையையும் கொள்ளுதல் பொருத்தமாகும் சென்னையில் உள்ள ஆட்சித் துறைகள் பலவற்றை மதுரைக்கு மாற்றினால் தென் பகுதியில் உள்ளவர்க்கும். தலைநகர் செல்ல நெடுந் தொலை செல்லவேண்டியுள்ளதே என்ற குறையுள்ளமும் நிறைவுறும். தலைநகராகும் தகுதியுறு மாடமலி மதுரையில் பல்கலைக்கழகமும் பல ஆண்டுகட்கு முன்பே தோன்றிஇருத்தல் வேண்டும்.

வட இந்திய மாநிலங்களை நோக்கத் தமிழகத்தில் பல்கலைக்கழகங்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளன என்று கழறுதல் வேண்டும். இரண்டேஇரண்டுதான் - சென்னையும் அண்ணாமலையும் - உள்ளன. மேல் நாடுகளைப்போன்று பெரும் நகரங்களிலும் பேரூர்களிலும் பல்கலைக் கழகங்கள் பலவாகத்தோன்றி இருத்தல்வேண்டும். இன்றேல் மாவட்டத்திற்கு ஒன்றேனும் அமைந்திருக்க வேண்டும். இன்றேல் மூன்று மாவட்டங்கட்கு ஒன்றாக நான்கேனும் இருத்தல்வேண்டும். ஆகவே இன்னும் இரண்டு – மதுரையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாகத் - தோன்றுதற்கு உடனடியாக ஆவன செய்ய அரசு முற்படவேண்டும். மதுரையில் பல்கலைக்கழகம் அமையப் போவதாகச் செய்திகள் வருகின்றன வேயன்றி செயலில் விரைவைக்கண்டிலோம். மூன்றும் திட்ட முடிவிற்குள் வரப்போவதாகக் கூறப்படுகின்றது.

மதுரையில் அமையப்போகும் பல்கலைக் கழகம் திருவள்ளுவர் பெயரால் விளங்குதல் வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். விவேகானந்தர் பெயரால் வடக்கே பல்கலைக் கழகம் இருத்தல் போன்று தமிழகத்தில் திருவள்ளுவர்பெயரால் பல்கலைக் கழகம் இருக்கவேண்டுமென்று எண்ணுவது நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உடையோர்க்கு இயல்பே. மக்கள் கருத்தை தழுவி நடத்தலே மக்களாட்சியின் மாண்பாகும் மதுரையில் திருவள்ளுவர் பெயரால் பல்கலைக்கழகம் விரைவில் அமைக்க வேண்டுமென்று மாநிலஅரசை வேண்டுகின்றோம்.

அமையப்போகும் இப்பல்கலைக் கழகம் ஏனை இரண்டினைப் போன்று இன்றிப்புது முறையில் அமைதல் நன்றாகும். இப்பொழுது இருக்கும் ஏனைய இரண்டின் மறுவடிவாக மதுரையில் தோன்றுவதில் பயனின்று, அங்ஙனம் தோன்றுவதிலும் தோன்றாமல் இருத்தலே நன்று. பயிற்சி மொழியைத் தமிழாகக் கொண்டு தமிழ்க்கலைக்கும் பண்புக்கும் அறிவியல் ஆராய்ச்சிக்கும் முதன்மை கொடுத்து பேரறிஞர்களைத் தோற்றுவிக்கும் பண்ணையாகத் **திருவள்ளுவர் பல்கலைக்கழகம்** இலங்குதல் வேண்டும்

## நேரு பெருமான் நிறைநலன் பெறுக.



இந்திய அரசின் உடலாகவும், உயிராகவும் ஏற்றம் பெற்றுள்ள பெருமைமிகு நேருஅவர்கள் விரைவில் உடல் நலம் பெற இறையருள் புரிவதாக. அயரா உழைப்பால்தான் அயர்ச்சியடைந்துள்ளார்கள் என்பது உண்மை, "அரசியலில் ஈடுபடுவது அயர்ச்சியைத் தடுத்து ஆயுளை நீடிக்கும்" என்பது சிலர்பால் ஓரளவு உண்மையேயாயினும், அளவுக்கு மிஞ்சினால் அமுர்தமும் நஞ்சாகுமன்றோ. ஆகவே திருமிகு நேரு அவர்கள் உழைப்பைக் குறைத்து ஓய்வுபெறல் வேண்டும்.

அதற்கு உதவியாக இந்தியக்கூட்டரசின் ஆட்சி முறையை உண்மையான கூட்டரசு முறையாக (Federal System) அமைத்துக்கொள்ளல்வேண்டும். இன்றும் இந்தியக் கூட்டரசு (Indian Union) என்ற பெயரால் ஆட்சி அமைப்பு இருப்பினும் மாநில அரசுகளின் உரிமைகள் பல மைய அரசினிடமே குவிந்துள்ளன. எடுத்துக்காட்டாக, செய்தித்தாள்—கிழமைஇதழ் — போன்றன தொடங்குதற்குரிய செயல்முறைக்குத் தில்லி அரசு ஒப்புதல் பெறவேண்டியுள்ளமையைக் கூறலாம். இன்னும் சிறுசிறு செயல்களுக்குக் கூட மாநில அரசை விடுத்து மைய அரசை நாடவேண்டியுள்ளது. ஆகவே மைய அரசுப் பொறுப்பு மிகுதியாகின்றது. அப்பொறுப்பின் தலைமையமைச்சருக்குப் பாரம் மிகுதியாகிவிடுகின்றது. எல்லா மாநிலங்களும் கட்டாயமின்றி ஒற்றுமையாக வாழ்வதற்குரிய வழி மாநில அரசுகட்குமுழு உரிமைகள் அளித்துவிட்டுக் கூட்டுப்பொறுப்பில் ஆற்றவேண்டிய படை, அஞ்சல், போக்குவரவுத் துறைகள் மட்டில் கலந்து செயல் புரியும் திட்டமொன்றைக்கொள்ளலே நன்று.

அங்ஙனம் கொள்வதற்கு, 'இந்திய நாடுகளின் ஒற்றுமை அரசு' (United States of India) என நாம் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்: அங்ஙனம் கொள்ளின் இந்தியஒருமைப்பாடு,தானே உண்டாகும், பிரிவினை மனப்பான்மை அடியோடு மறைந்துவிடும். நம் இந்தியப் பெருமாநிலத்திற்கு அமெரிக்கா அல்லது உருசியா போன்ற நாடுகளிலுள்ளதுபோன்ற கூட்டரசுமுறையே சாலவும் பொருத்தமாகும்,

நேருபெருமான் அவர்கள் விரைவில் நிறைநலன் பெற்றுத்தம் கடமையை விரைவில் ஏற்பார்களாக. எல்லா மாநிலங்களும் தன்னாட்சியுரிமையுடன் ஒருமைப்பாடு கொள்ளும் உயர் பெருந்திட்டத்தை வகுத்து உண்மை மக்களாட்சி வெற்றிபெற உதவ வேண்டுகின்றோம்.

விரும்பாத மக்கள் மீது வேற்று மொழியைப் புகுத்தும் வீண் செயலைக் கைவிடச்செய்து அதன் பெயரால் நடைபெறும் மக்கள் கிளர்ச்சியை நிறுத்தமுயல வேண்டுகின்றோம். நேரு பெருமான் நெஞ்சில் நினைத்தால் நிகழ இயலாதன உளவோ?


## உழைப்பின் வெற்றியும் ஒண்தமிழ் உயர்வும்.

'அகில இந்தியக் காங்கிரசு'த் தலைமைப் பதவி, அடையவிரும்புவோர்க்கெல்லாம் எளிதில் கிடைத்துவிடாது. அவ்வுயர் பதவியில் திருவாளர் **காமராசர்** அமர்ந்திருப்பது தமிழர்க்கு ஒரு பெருமையேயாகும். பதவித் துறப்புத் திட்டம் ஒன்றுக்குத் தந்தையார் எனப்படும் திருவாளர் காமராசர் அவர்களை உயர் பதவி ஒன்று தேடிவந்தடைந்துள்ளது. அவரின் குன்றா உழைப்பாலேயே இன்று அவர் குன்றின்மேலிட்ட விளக்காய் இலங்குகின்றார். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

நேருபெருமான் அவர்களின் நெஞ்சில் இடம்பெற்ற தலைவராக இருக்கும் அவரைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அவர் தலைவராக அமர்ந்ததனால்நம்அன்னைத்தமிழும்அரியணை பெற்றதாகவே கருதுகின்றோம். அவர் தலைவராக வந்ததனால்தான் அங்கு-புவனேசுவரத்தில் - தமிழ் வழங்காநகரில் தமிழ் முழக்கம் நிகழ்ந்தது.

வேற்றுநாட்டுத் தலைவர்கள் எல்லாரும் பிறமொழிகள் தெரிந்திருப்பினும் தாம் செல்லுமிடங்களில் தம் மொழியிலேயே உரை நிகழ்த்துகின்றனர். நம் நாட்டினர் தம் மொழியில் உரை நிகழ்த்துவதைத் தாழ்வென நினைத்தனர். ஆகவேதமிழறியாதார் செவிகளில் தமிழ் ஒலிபுக வாய்ப்பில்லாது இருந்தது. இப்போது மதிப்புக்



குரிய கருமவீரர்காமராசர் தலைமை உரையைத் தமிழில் நிகழ்த்தியதனால் தமிழை ஒலியளவிலேனும் வெளிநாட்டார் ஓரளவு அறிய முடிந்தது. அதனால் தமிழும் மதிப்புப்பெற்றுள்ளது. எனவே இதற்குக் காரணமாய் இருந்த அவரை வாழ்த்துகின்றோம். இனிச் செல்லுமிடங்களில் தமிழிலேயே தயங்காது பேசுதல்வேண்டும். வெளிநாடுகளுக்கு அ.இ.கா. தலைவர் என்ற முறையில் செல்லுதல் வேண்டும்; சென்று அங்கும் தலைவர்களுடன் தமிழிலேயே உரையாடுதல் வேண்டும் என வேண்டுகின்றோம்.

இங்ஙனம் ஒண் தமிழுக்கு உயர் சிறப்பு அளிக்கக் காரணமாய் இருக்கும் கருமவீரர் அவர்கள் தமிழை அழிக்கவரும் இந்தித் திட்டத்தை — மறைமுகமாகத் திணிக்கப்படும் இந்திக்கொள்கையை மாற்றி நாட்டில் நல்லமைதி உண்டுபண்ணவும் கைகூப்பி வேண்டுகின்றோம். கருமவீரர் காமராசர் கன்னல் தமிழ் காத்து கணக்கில் காலம் வாழ்வாராக.

## நகர் மன்றத் தேர்தலில் யாருக்கு வாக்கு ?

நகர்மன்றத்தேர்தல் நாடெங்கும் நடைபெற இருக்கிறது. கட்சிக்கொள்கைகட்கு அப்பாற்பட்ட தேர்தலில் கட்சிகள் ஈடுபட்டு வெற்றியை நாடி அயராது உழைக்கின்றன. நகர மக்கள் "இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்னும்குறள்நெறியைப் பின்பற்றித் தீந்தமிழ்ப் பற்றும் திருக்குறள் நெறியில் உறுதியும் உடையோர் யாவரேயாயினும் அளிக்கவேண்டுகின்றோம். நற்றமிழைக் காப்பதற்கு நகர்மன்றங்கள் செய்ய வேண்டிய பணி அளப்பில. ஆதலின் நற்றமிழ்ப்பற்றுடையாரே நகர் மன்றத்தில் அமரவேண்டுமென்று விரும்புகின்றோம். அமர்ந்துதெருவெலாம்தேமதுரத் தமிழைக் காணவும் கேட்கவும் செய்வாராக.

## ஆசிரியர் தொகுதி

மாநிலச் சட்டமன்றத்திற்கு (மேல்சபை) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய தொகுதிகளுள் ஆசிரியர் தொகுதியும் ஒன்று. இவ்வாசிரியர் தொகுதியுள் தொடக்கக் கல்விக்கூடங்களில் பணி செய்வோரைச் சேர்த்திலர். ஒரே தகுதியுடையவர் உயர்நிலைப்பள்ளிக்கூடத்தில் பணிபுரிந்தால் ஆசிரியர் என்ற முறையில் வாக்களிக்கும் உரிமை பெற்றும், தொடக்கக் கல்விக்கூடத்தில் பணிபுரிந்தால் அவ்வுரிமைஇழந்தும் போகின்ற அவல நிலைமையைநீக்கவேண்டுமென்று பலரும் முயன்று வரும்போது, ஆசிரியர் தொகுதியையே அகற்றிவிட முடிவு செய்துள்ளது, ஆசிரியர் இனத்தை இழிவுபடுத்துவதாகும். ஆசிரியரை மதித்துப் போற்றவேண்டுமென்று கூறிக்கொண்டு ஆசிரியர்க்கு மதிப்பளிக்கும் ஒன்றை அகற்ற முயலுதல் அடாதது ஆகும். ஆகவே ஆசிரியர் தொகுதியை அகற்றுவதற்குச் செய்யும் முயற்சியைவிட்டுவிடலே நன்று. தொடக்கக் கல்விக்கூட ஆசிரியருக்கும் ஆசிரியர் தொகுதியில் வாக்களிக்கும் உரிமை நல்கி ஆசிரியரினத்தின் நன்றிக்கு ஆளாதலே ஏற்றது. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" எனப் போற்றியது நம் நாடு: இதனை மறந்துவிட்டது இனியேனும் போற்றட்டும்.

கல்வி அமைச்சராகவருவோர் கற்றறிந்த ஆசிரியருள் ஒருவராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் கல்வித்துறை மேம்பட்டு விளங்கும்; ஆசிரியர் பெருமையையும் உலகறிய வாய்ப்பு ஏற்படும்.

ஆதலின் ஆசிரியர் தொகுதியை அகற்றுதல் வேண்டாம்; எல்லா ஆசிரியர்களுக்கும் அத்தொகுதியில் இடமளிக்கவேண்டும் என மக்கள் வேண்டுவது இயல்பு தானே. ஆசிரியரைப் போற்றும் நாடே அவனியில் சிறக்கும் நாடாகும்.

திறம் பெறும் முறையில், நல்ல
தீந்தமிழ் செழிக்கச் செய்ய,
வரம்தரும் வகையில் இன்று,
வள்ளலும் தோற்கும் வண்ணம்
"குறள் நெறி" வாரித் தந்து,
குவலயம் தழைக்கச் செய்யும்
அருள் நெறி உருவே, வாழி!
அழிவிலாத் தமிழே, வாழி!

குறள் நெறிக்கவிராயன்

# நற்றமிழில் பேசுதலை நாகரிகமாகக் கொள்க

# பட்டம் உறுதியாயிற்று

— கண. சிற்பேசன் எம். ஏ.

அப்பகுதி மக்கள் அவனைப் பொதுவாகப் பைத்தியம் என அழைப்பார்கள். கல்வியறிவுடையோர் சிலர் விஞ்ஞானி என்பார்கள். அறவோர் சிலர் "அவன்தான் சிறந்த மனிதன்; தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பவன்" என்பார்கள். "உள்ளே உள்ளதை மறைக்க நடிக்கும் இவன் காரியக் கிறுக்கு" என்பார்கள். கற்றறிந்த சில இளைஞர்கள் இவை எல்லாம் அவனுக்குத் தெரியும் ஆனால் இதைப்பற்றி அவன் கவலைப்படுவதுமில்லை அவர்களைத் திருத்த முனைவதுமில்லை. தனியே வாழும் அவனது அறையில் காலை 6 மணிக்குத் தட்டுப்பொறி இயங்கத் தொடங்கும். ஒரு மணி நேரத்திற்குப் பின் மின்சார அடுப்பு இயங்கும். அரிசியைக் களைந்து ஒரு பாத்திரத்திலிட்டு அதை அடுப்பிலேற்றி அது கொஞ்சம் வெந்ததும் பிற காய்கறித் துண்டுகளை நறுக்கி அதனோடு சேர்த்து வேகவைத்த பொங்கலே நாள்தோறும் அவனுடைய உணவு.

காலை 8 மணிக்கு அவன் வீட்டுச் சிறு தோட்டத்திற்குச் செல்வான் முயல்கள் தாவித் தாவி ஓடிவந்து அவன் கால்களை மெல்லக் கடிக்கும். பின்னர் அவன் மேற்கொள்ளும் செயல்கள்தான் அவனை உலகம் பைத்தியம் எனப் பழிக்கக் காரணமானவை ;- மெல்லச் செல்வான். வலைகளாலான கூட்டின் சிறு கதவைத்திறப்பான்; கூர்ந்து நோக்குவான். அவ்வளவே திடுமென இடக்கை விரல்களிரண்டால் கூண்டிலிருந்த பாம்புகளில் ஒன்றன் தலையை இடுக்கி போலப் பற்றிக்கொள்வான் மற்ற பாம்புகள் அஞ்சியோடி மூலையில் சுருட்டிக்கொள்ளும். பிடிபட்ட பாம்பு தன் உடலையும் வாலையும் இவனது கையைச் சுற்றிச் சுற்றிக் கொள்ளும். அதைப் பிடித்தவாறே தன் ஆய்வறையில் புகுவான். வண்ணக் கண்ணாடிக்குப்பியில் அதை விடுவான். பிறகு ஆராய்ச்சி தொடங்கும்.

இரண்டு மணி நேரத்திற்குப்பிறகு வெளியே வருவான். ஏழைக் குறவர் கூட்டமே அவனைக்காணக்காத்து நிற்கும். அவரவர் தமக்குக் கிடைத்த ஊர்வன, பறப்பன முதலியவற்றைச் சுமந்தவாறு மலைவளங்காணச் சென்ற சேரனின் செவ்விகாணக் காத்துநின்ற குறவர்போல நிற்பர். அவ்வளவையும் விலை கொடுத்து வாங்கிக் கொள்வான்

இன்றைக்கும் அவ்வாறுதான் ஒரு குறவன்வந்தான். பாம்பைக் கொடுத்து விட்டுப் பலகாலும் பழகிய அன்புடைய அவன் "சாமி இது ரொம்பப் பொல்லாதுங்க. குறளியுங்கூட பார்த்தா சும்மா கிடக்கும். தொட்டாலும் சும்மா கிடக்கும். ஆனால் டபார்ன்னு போட்டுடுங்க ... கவனமா இருங்க... கருப்பணசாமி துணை இருக்காரு" எனக்கூறிவிட்டுச் சென்றான். விஞ்ஞானியின் அனுபவ அறிவையே ஏளனம் செய்வதுபோலிருந்த சொற்கள் அந்த ஏழைக் குறவனின் அன்பையும் அருளையும்கொட்டி நின்றன. புதிய விரியன் புத்தறை புகுந்தான் அவனுக்குப் பாலும் உணவும் கிடைத்தன, உண்டு கொழுத்திருந்த அவன் இறந்ததுபோலவே கூட்டிற்குள் கிடந்தான். விஞ்ஞானி கவனக் குறைவாகப் பிடிக்கவே கைகளில் கடித்துவிட்டான். ஆனால் அவனே கைப்பிடியைத் தளர்த்தாமல் மீண்டும் அதைக் கூண்டிற்குள் அடைத்துவிட்டு வேகமாக வீதியை நோக்கி ஓடினான். வாயிற்படியில் விழுந்துவிட்டான்.

(தொடரும்)

# வெல்க குறள்நெறி!

(புலவர் வேலவன்)

– குறள் வெண்பா :

1 கூடல் நகரில் குறள்நெறித் தேன்பெருகி
ஓடல் இனிதே உவந்து.

2 குறள்நெறிப் பூங்குயிலே கொள்கைப் புரட்டர்
குரல்நெறிக்க வந்தாயோ கூறு.

3 எழுதத் தெரிந்தோர் எழுத்தாள ராகுந்
தொழுநோய் துடைப்பாய் துணிந்து.

4 பிறழ்நெறியே பேசுகின்ற பித்தருளம் மாற
குறள்நெறியே கூவு குழைந்து.

5 அருள்நெறி பேசி அவம்செய்து வாழும்
இருள்நெறி யாளரை எற்று.

6 பாலில்நீர் பெய்துவிற்கும் பாவியரைப் போலெழுது
நூலில்தீச் சொற்கலப்பின் நூறு.

7 குறுக்குவழி யேர்டுங் குறுமதியைக் கொட்டிப்
பொறுப்பு வழிகாட்டிப் போற்று,

8 வீட்டு விளக்காய் விறற்கவிஞர் தம்குரலாய்ப்
பாட்டுத் துறைசிறக்கப் பாடு.

9 தமிழ்தாக்கச் சூழுந் தமிழ்ப்பகைவர் தோற்க
தமிழா குறள்நெறியைத் தாங்கு.

10 குறள்போலத் தோன்றுங் குறள்நெறியே சங்க
நிரல்போல வெல்க நிலைத்து.


# 'குறள் நெறி'

( திங்கள் இரு முறை வெளிவரும் )
ஆசிரியரும் வெளியிடுவோரும்;
**பேராசிரியர் சி. இலக்குவனர்**
**தனி இதழ் விலை 25 காசு**
**ஆண்டுக் கட்டணம் ரூ 5.**
விவரங்கட்கு :

**ஆசிரியர் 'குறள்நெறி'**
திருநகர். மதுரை-6


6ஆம் பக்கத் தொடர்ச்சி

மறைமலையடிகள் ... ...

வண்ணமாயிருந்தனர். அடிகள் தம் நாட்குறிப்புகளில் முதலியார்தம் அன்பு, வண்மை, உதவி முதலியவற்றை அவ்வப்போது குறித்துள்ளனர். இம்முதலியாரின் பேரர்தாம், சென்னை மாநகராட்சித் தலைவராய் விளங்கிப் புகழுடன் திகழும் டி. செங்கல்வராயன் ஆவர்.

(மறைமலையடிகள் வரலாறு பக்கம் 27)

கவிப்புக் கோடுகளிலுள்ளவை இக் கட்டுரையாசிரியரின் குறிப்புகள்.

(15—1—64 இதழின்தொடர்ச்சி)

# திருக்குறளில் உருவகம்

(ஆங்கிலப் பேராசிரியர் வி. ஒப்பிலி)

**ஓரறிவின் :** ஓரறிவுள்ள உயிரினத்தை - சிறப்பாக மரத்தை, பயனுள்ளது, பயனற்றது என இரு வகையாகக் காண்கிருர் கவிஞர். உலகில் வாழும் மக்களும் அதற்கேற்ப இருவகையாகத் தோற்றமளிக்கின்றனர். இதுவன்றிப்பொதுவாக ஆரறிவு படைத்த மனிதனேடு ஒப்பிட்டுப்பார்த்தால், மரம் தாழ்ந்ததே ஆதலால் மனித குண நலன்களில் குன்றிய யாவரும் பெரும்பாலும் மரமாகக் காட்சியளிக்கின்றனர். அன்பு இல்லாதோர் பாலைநிலத்துப் பட்ட மரமாகின்றனர். இங்கு குளிர்ந்த நீரும் நிழலும் அன்பிற்கும். இவை இரண்டும் அறவே தோன்ருத பாலைநிலம் ஈரமற்ற தன்மைக்கும், துளிர் என்றும் தோன்ற வழியின்றி வெறுமையாக உலர்ந்துநிற்கும் பட்டமரம் பயனற்ற உழைப்பற்ற தன்மைக்கும் உருவகங்களாகத் தோன்றுகின்றன. பாலைநிலத்து பட்ட மரத்தை எண்ணிய வள்ளுவர், ஊர் நடுவிலுள்ள நல்ல பழமரத்தையும் எண்ணிப்பார்க்கிருர். பயன் தரும் தன்மையால் பழம் செல்வமாகிறது. இது நன்மையின் உருவாய், உதவி செய்யும் உள்ளமுடைய, அன்புள்ள செல்வரின் உருவகமாகத் தோன்றுகிறது. பழம் மட்டுமின்றி, எல்லா உறுப்புகளும் மருந்தாகும் நன்மரமாகவும் உதவிசெய்யும் செல்வர் தோற்றமளிக்கின்றனர். மாருக, செல்வத்தை ஈட்டிக்காக்கும் உலோபி ஊர்நடுவே நச்சுப் பழம் பழுக்கும் பயனற்றமரம். இவ்வாறு நச்சுப் பழம் பழுக்கும் மரத்தை, சினத்தை உள்ளடக்கி, இன்ன செய்தாரை ஒறுத்து, அவரது தீயமனப் பான்மையை அழிக்கும் நற்சின்னமாகக்காண்கிருர் (Blake) பிளேக்கு என்ற ஆங்கிலக் கவிஞர்! அவரது பாடல் கிருத்துவ மதத் தத்துவமான மன்னிப்பின் மாண்பைக் காட்டும் உருவகப் பாடலாகும்.

இப்பாடல் பின்வருமாறு :

I was angry with my friend;
I told my wrath, my wrath did end
I was angry with my foe:
I told it not, my wrath did grow.

And I watered it in fears
Night and morning with my tears,
And I sunned it with smiles
And with soft deceitful wiles.

And it grew both day and night
Till it bore an apple bright,
And my foe beheld it shine,
And he knew that it was mine,—

And into my garden stole
When the night had veiled the pole.
In the morning, glad, I see
My foe outstretched beneath the trəe.

பொதுவாக ஊக்கமில்லாதோரும், கண்ணேட்டமில்லாதோரும், மக்கட் பண்பு இல்லாதோரும் ஓரறிவுடைய மரமேயாவர், பழத்தில் சிறந்தது 'காழில் கனி' —விதையில்யாதது. இனிமையைக் குலைக்கும் விதை ஒன்றும் இல்லாததால் இப்பழம் இருவரின் மனம்ஒட்பிய காதல் வாழ்க்கையின் முழு இன்பத்திற்குப் பெர்ருளாகிறது. உண்ணக்கூடிய பழம் மிகப் பழுத்தாலும் அழுகிவிடுகிறது. இது பிணக்கு என்ற சிறுசிறு விதையும் இல்லாது அழகிய காமமாக உருவெடுக்கிறது! இவ்வாறே முற்ருத காயும் பிணக்குத் தோன்ருத காமத்திற்கு உருவகமாகிறது, பழத்தைக் காலமறிந்து பறித்து உண்ண வேண்டும். காமத்திற்கு சுவையூட்டுவது பிணக்கு. அதைக் காலமறிந்து காமத்துடன் இணைத்து இன்புறுதல் வேண்டுமென்பதை இத்தக் காய் கனி உருவகம் நன்ருக எடுத்துக்காட்டுகிறது. மேலும் காய் கடுஞ் சொல்லாகவும், கனி இனிய சொல்லாகவும் கூறப்படுகின்றன.

இனி, மரத்தில் ஏறுதலும், மரத்தையோ, கொடியையோ வெட்டுவதும் சில குறட்பாக்களில் உருவகங்களாக அமைகின்றன. நுனிக்கொம்பில் ஏறுதல் உயிருக்குத்தீங்கு அதையுங் கடந்து மேலும் ஏற முனைபவர் தன் வலிமையறியாத மூடராவர். உயர்ந்துள்ள மரக்கிளை உயிர்க்கு ஊறுசெய்யும் சின்னமாகத் தோன்றுகிறது. இதை மனத்திற்கொண்டு பின்வரும் குறளைக் காண்போம்.

"கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடு கோடேறும் என்நெஞ்சு" (1264)

காதல் நோயால் வருந்தும் தலைவி தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலனை எண்ணி, தனது நெஞ்சம் மரக்கிளைமேலும் ஏறிப் பார்ப்பதாகச் சொல்லுகிருள். மரக்கிளை உயரே இருப்பது; நுனிக்கொம்பு; காதல் நெஞ்சம் அங்கு ஏறுகையில். தோன்றும் தீங்கையும் மதியாது, உயிரையும் ஓம்பாது, மேலே மேலே உணர்ச்சிப் பெருக்கொடு தாவிச்செல்கிறது. காம வயப்பட்ட காதலியின் ஆர்வத்தை எவ்வளவு எளிதாக இம்மரக்கிளை உருவகத்தின் மூலம் திருவள்ளுவர் காட்டுகிருர்! முள் நிறைந்த மரமும் தீங்கின் வடிவமாகிறது. இது பகை உருக்கொள்கிறது. பகையை முதிருமுன் அழிக்கவேண்டும். அவ்வாறே முள் மரத்தை இளையதாக இருக்கும்பொழுதே வெட்டி வீழ்த்தவேண்டுமென்கிருர் கவிஞர். இங்கு முட்கள் பகைக்கும், தீமைக்கும் உருவகங்களாக நிற்கின்றன. இவ்வாறே செல்லி என்ற ஆங்கிலக் கவிஞனும் "வாழ்க்கையில் தோன்றும் முட்களின் மீது விழ்ந்து இரத்தம் வடிக்கிறேன் நான்" என்று சொல்லுகிருன். மேலும் பகையைத் தோன்றுங் காலத்தில் அழிக்கவேண்டுமென்ற இக்கருத்து, ஆங்கிலத்திலுள்ள 'மொட்டாக இருக்கையில் அழி" (nip in the bud) என்ற வழக்கை ஒத்திருப்பதைக் காணலாம். இளையதான முள்மரத்தை எளிதில் வெட்டலாம்; ஆனல் முதிர்ந்தபின் அதை வெட்டி வீழ்க்க இயலாது என்ற சொன்ன வள்ளுவர், பின்னர் நன்ருக முதிர்ந்து, பருத்து வளர்ந்த அடிமரத்தையும் வீழ்க்கும் கோடரியையும் எண்ணிப்பார்க்கிருர். பருத்த அடிமரம், மண்ணில் ஆழப்புதைந்தவேருடன், பண்பும் உயர்வும் உள்ள பழம் பெருங் குடும்பத்தின் உருவெடுக்கிறது. ஆனல் எத்துணை பெரிய மரமாயினும் கோடரியால் வெட்டிவிடுகிருர்களே! வாழ்வில் உடனிருந்து தாங்கவல்ல நல்ல ஆள் இல்லாத குடி, அடிமரம் போல் தாழ்த்துப் பருத்ததாயினும், துன்பம் வருங்கால், வீழ்ந்துவிடுகிறது. (தொடரும்)

# இந்தியாவின் மொழிச்சிக்கல்

**கடலரசன்**

இந்தியத் துணைக்கண்டத்தில் நிரந்தர விவாதத்துக்குரிய சிறந்தபொருளாக மொழிச்சிக்கல் அமைந்துள்ளது. அரசியல் வடிவம் பெற்றுள்ள மொழி ஆதிக்கம் பெருநிலப் பரப்பின் கருப்பொருளாக அனைவரின் சிந்தனையையும் கவர்ந்துள்ளது. ஆட்சிபீடத்து ஆதிக்க மொழியாக நான்கு நூற்றாண்டுகள் இடம் பெற்றிருந்த ஆங்கிலம் அகற்றப்படுவதும், அந்தச் சிறப்பான உரிமையை இந்தி மொழிக்கு வழங்குவதும் இமயம் முதல் குமரிமுனை இறுதியாக கடுமையான கண்டனத்துக்குரியதாக அமைந்துள்ளது. இந்திக்கு மகுடம் சூட்டினாலும் ஆங்கிலத்தின் தேவையைப் புறக்கணிப்பதுஇயலாத செயலாக இருக்கிறது. ''அறிவுப்பெருக்கத்திற்கு ஆங்கிலம் தேவையாகும். அனைத்திந்தியத்தொடர்புமொழியாக ஆங்கிலமே நீடிக்கவேண்டும் இந்திமொழி அனைத்திந்தியத்தொடர்புமொழியாகக்கூடியநிலையைஇன்னும்அடையவில்லை. இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிவழி மாநிலங்களுக்கிடையே செய்திப் போக்குவரத்துத் துறையில் வளர்ந்துவரும் தேவையைநிறைவுசெய்வதில்.ஆங்கிலமேசிறந்தமுறையில் பயன்படமுடியும். வட்டார மொழிகள் ஆங்கிலத்தின் இடத்தை நீக்கிவிடும் அளவுக்கு வளர்ச்சியுறவில்லை; அதன் இடத்தைப் பிடிப்பது இயலாத ஒன்றாகும்'' இந்தியஅரசின்இன்றையக்கல்விஅமைச்சர் எம்.சி.சக்ளா அவர்கள் இந்தக் கருத்துக்களை பம்பாய்—குசராத் சீக்கியக் கழகத்தின் 22வது விழாவில், பேசும்போது மிகவும் துணிவுடன் கூறியுள்ளார். ''ஆங்கிலத்தை அகற்றுவது அறிவுக் கதவை மூடுவதாகும். இந்தி வெறியர்களின் மனப்போக்கு மாறவேண்டும். எல்லாம் இந்திமயமாக மாறவேண்டும் என்று கூக்குரலிடுவது, இயல்பான உண்மைகளைக் காண மறுத்துக் கண்களை மூடிக்கொள்வதாகும்''—இதனை, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் சென்னை இந்திப் பிரச்சார சபையின் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். ''மொரார்சியின் இந்தி வெறிக்கு ஆந்திர மாநில மக்கள் எதிர்ப்பு, இந்தியில் பேசுகையில் கூட்டத்தை விட்டு வெளி நடப்புச்செய்தனர். முரட்டுத்தனமான போக்கிற்கு மக்கள் சரியான பாடம் கற்பித்துள்ளனர்.''—என்ற செய்தித் துணுக்கும் தினத்தாட்களில் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலம்—இந்தி இரண்டின் நிலையையும் இந்திய அரசில் பொறுப்பேற்றுள்ளவர்கள் விளக்கியுள்ளனர். ஒரு மொழி ஆதிக்கம் இந்தச் சிக்கலை உருவாக்கியிள்ளது.

ஆங்கிலத்தின் அவசியத்தை முற்றும் உணர்ந்து உரை நிகழ்த்திய சக்ளாவைப் போலவே வேறு பல அறிஞர்களும் அவர் தம் அருமையான கருத்துக்களைச் சொல்லியுள்ளனர் இந்தியத் தலைமையமைச்சர் அவர்கள் கூட அடிக்கடிஅதனை நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் வேறோர் நிலையில் இந்தியைத் தமக்கையாகவும், தமிழைத் தங்கையாகவும் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார் இந்தச் செய்தியுடன, ''கீழ்வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்றுத்தரப்படவேண்டும். சிறுவர்களின் எதிர்காலம் அதில் அடங்கியுள்ளது – இந்தியின் திணிப்புத் தேவையன்று' என்று குசராத் அரசுக்கு அந்த மாநிலத்து ஆமதாபாத் பெற்றோர்கள் சங்கம் இறுதி எச்சரிக்கை அனுப்பியிருக்கும் சிறந்த குறிப்பும் காணப்படுகின்றது. மொழிச்சிக்கலில் இந்திக்குள்ள பொது மன்றத்து குறைந்தளவு ஆதரவினையே நம்மால் உணர முடிகிறது. உலகப் பொதுமொழி யென்ற உயர் நிலையிலிருக்கும் ஆங்கிலம் துணைகண்ட மக்களிடையே தொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமான வலியுறுத்தப்பட்ட உண்மையாகும். வட்டார மொழிகளின் வளர்ச்சியை ஆங்கிலம் கட்டுப்படுத்திவிடும். இந்தி வளப்படுத்தும் என்று வலிவான சான்றுகளைச் சொல்லிச் சொற்போரிட ஆயத்தமாக இல்லை. இந்தியின் தகுதியைக் குறைத்து மதிப்பிட்டால் எதிர்ப்பாளர்களின் தூண்டுதல் என்றெண்ணுவோரும் உண்டு ஆழ்ந்த மொழித்திறனாய்வு படைத்தோரும்கூட இந்தப் பழியினின்று விடுவித்துக்கொள்ள முடிவதில்லை தமிழகத்துப் புலவர் குழுவினர், கன்னியாகுமரியிலும் புதுவையிலும் கூடி முடிவெடுத்தபோது அரசியல் கட்சி சார்புடையோர் இவ்விதமே மதிப்பிட்டனர். ஆனால் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்குப் பெருமுயற்சிகள் செய்யப்பட்டு வந்தாலும் அதனுடைய நிறைவுக்குறையை எவராலும் சரி செய்ய இயலவில்லை. அண்மையில்தான் சட்டச் சொற்களை இந்தியில் மொழிபெயர்க்கக்குழு அமைத்துள்ளனர் ஆட்சி மொழியாகப் பயன்படக்கூடிய தரமான இந்திச்சட்டச் சொற்களை உருவாக்க மத்திய அரசினரின் சட்டங்கள், விதிகள், ஆணைகள் இவற்றுக்குரிய சட்டச்சொற்களைத் தேடிக்கொண்டுள்ளனர். இதைப்போல் எத்தனையோ வகையான முயற்சிகளுக்காகப் பொதுமக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுகின்றது என்ற உண்மை எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். அரசியல் சார்பு சூழ்நிலைகளுக்கு அப்பால் பணியாற்றும் மொழி வளர்ச்சியின் சிந்தனையாளர்கள், கட்டாயமாகத் திணிக்கப்படும் மொழிச்சிக்கலைத் தீர்க்க முற்படவேண்டும்.

இந்தியாவின் தேசிய மொழியாகப் பதினான்கு எண்ணிக்கை விளம்பரப்படுத்தப்பட்டாலும் இந்திமொழி ஒன்றுக்குமட்டுமே ஆட்சிபீட உரிமை வழங்கப்பட்டுள்ளது பெரும்பான்மையோர் பேசுகின்ற மொழியென்றும் துணிந்து பொய்யுரைக்கப்படுவது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். அரசினர் மக்கள் அவையிலும்-மாநிலத்து-சட்ட மன்றத்திலும் அளித்துள்ள ஆதாரங்கள் எவற்றிலும் இந்தி பேசுவோரின் தனிக்கணக்கை இதுகாறும் காட்ட இயலவில்லை. இந்தி, இந்திசுதானி, உருது, பஞ்சாபி, என்ற நான்கு மொழிக்குழுவினர் பேசும் எண்ணிக்கையைத்தான் நாற்பத்திமூன்று சதவிகிதம் என்று நாட்டுக்குச்சொல்லி நம்பித்தீரவேண்டுமென்று நம்மையெல்லாம் கட்டாயப்படுத்துகின்றனர். உலகமொழிக்கும் தாய்மொழிக்கும் இடையிலே இன்னொரு தரகு மொழி தேவையில்லை; தவிர்க்கப்படவேண்டும். இந்தியாவின் மேன்மைக்காகச் சட்டங்கள் செய்யும் ஆட்சிபீடத்தவர். சலுகைகளை உருவாக்கித்தரும் அமைச்சர் குழுவினர் மற்ற தேசிய மொழிகள்பற்றி கவனம்கொள்ளவில்லை. ஆங்கிலத்தைத் தேசியமொழி நிலையிலேயிருந்து அந்நிய மொழியாக அறிவித்துவிட்டாலும், அதனைத் தாய்மொழியாகக்கொண்டவர் விடுக்கும் விண்ணப்பத்திற்கு விடைதர முடியவில்லை. அந்த மக்களுடைய உரிமைக்காகப்பாராளுமன்றத்தில்தொடர்ந்துபோராடும் பிராங் அந்தோனி அவர்கள் சில திங்கள்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்திருந்தபோது இந்தியாவின் நிரந்தர ஆட்சிமொழியாக இந்தியைத் திணிப்பதற்கு ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்ட கொடுமையான முறைகளை எல்லாம் சான்றுகளுடன் விளக்கியபோது வியப்புடன் மயங்கியவர்கள் எண்ணிக்கையிலே மிகஅதிகம்பேராகும். இந்தியாவின் மொழிச்சிக்கல் தமிழ்மக்களின் வாழ்வில் பலசோதனைகளைத் திணிக்கும் திட்டமாகும். ஒருமொழி-அதுவும் இந்திமொழியேதான் தமிழர் அனைவரின் வாழ்வியலுக்கும் வரம்புகட்டும் வாய்ப்பினைப் பெற்றுவிட்டதென்றால், மொழிகாக்கும் அரும் பணியினைத் தமிழர் அனைவரும் ஏற்றுக்கொண்டாகவேண்டும் தாய்மொழிப் பற்றால் மேற்கொள்ளும் தலையாய கடமைப் பணிகளுக்கு 'மொழிவெறி' யென்ற அவதூறு வழங்குவதற்கும் இங்கே சிலர் காத்திருக்கிறார்கள். இந்தியாவின் ஒற்றுமையைக் காத்திடும் பெருநோக்கம் கொண்டவர்கள், இந்தி தவிர ஏனைய மொழிகளுக்கும் உரிய பெருமையினை வழங்கவேண்டும் நினைவிழந்தவர்களுக்கு தூண்டுதலாக குறள்நெறி விரும்பும் நல்லவர்களின் பணி அமையவேண்டும். தமிழர் திருநாளில் உறுதியெடுத்துப் பணி புரிவோம். வாழ்த்துக்கள் – வணக்கம்

---

**வரப்பெற்றோம்**

1 **குழந்தைப்பாடல்கள்:** ஆசிரியர் புலவர் மு. இராமலிங்கம், இராசராசேசுவரி பதிப்பகம், மதுரை-1. விலை காசுகள் 25.

2 **சக்தி நான்மணிமாலை:** ஆசிரியர் குயில்-வித்துவான் ச. இராமசாமி, தமிழ்ச்செல்வி நிலையம், மீனாட்சிபுரம், திருநெல்வேலி மாவட்டம். விலை 50 காசுகள்

மதிப்புரைக்குப் புத்தகங்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

(15—1—64 இதழின் தொடர்ச்சி)

# தொல்காப்பிய விளக்கம்

பேராசிரியர்
சி. இலக்குவனார்

தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் எனும் முப்பெரும் பிரிவுகளையுடையது. எழுத்தும் சொல்லும் தமிழ் மொழியைப்பற்றியும், பொருள் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் அறிவிப்பன வாகும். இற்றை நாளில் மேலைநாட்டார், ஒருமொழி யின் பேச்சொலி பற்றி ஆராய்வதை Phonology என்றும், சொற்கள் பற்றி ஆராய்வதை Morphology என்றும் அழைப்பர். இவை இரண்டும் மொழிநூலின் கூறுகளாகும். தொல்காப்பியத்தின் எழுத்தும் சொல்லும், தமிழ்மொழியின் ஆராய்ச்சி யேயாகும் (Science of Tamil Language).

உள்ளத்தில் எழும் எண்ணங்களைப் பிறர்க்கு அறிவிப்பதற்கு பயன்படும் கருவிதான் மொழி என் றாலும், உணர்ச்சி வயப்பட்ட உயர்ந்த எண்ணங் களையும் உண்மைகளையும் இனிமை தூய்மை அழகு முதலியன பொருந்தச் சொல்லுங்கால், நிலைத்து நிற்கும் இலக்கியமாய்விடுகின்றது. இவ் விலக்கியம் பற்றி ஆராய்வதுதான் தொல்காப்பியத் தின் பொருள் ஆகும். ஆதலின் பொருள் என்பது Science of Literature ஆகும்.

அன்றியும் இலக்கியம் என்பது மக்கள் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டதாகும். (Literature is the mirror of Life) ஆகையால் பொருட்பகுதியால் பண்டைத்தமிழ் மக்கள் வாழ் வும் அறியப்படும்.

ஆகவே தொல்காப்பியம் எனும் தொன்மைப் பெருநூல், தமிழ்மொழி, இலக்கியம், தமிழர்வாழ்வு அறிவிக்கும் பழங்கருவூலமாகும். தமிழராய்ப் பிறந் தோர்தவறாதுகற்கவேண்டியதனிப்பெருநூலாகும்.

இப்பெருநூலின் எழுத்து, சொல், பொருள் எனும் முப்பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளன.

**எழுத்து:** 1 நூன்மரபு 2 மொழிமரபு 3 பிறப் பியல் 4 புணரியல் 5 தொகை மரபு 6 உருபியல் 7 உயிர்மயங்கியல் 8 புள்ளி மயங்கியல் 9 குற்றிய லுகரப்புணரியல்.

**சொல்:** 1 கிளவியாக்கம் 2 வேற்றுமையியல் 3 வேற்றுமை மயங்கியல் 4 விளிமரபு 5 பெயரியல் 6 வினையியல் 7 இடையியல் 8 உரியியல் 9 எச்ச இயல்.

**பொருள்:** 1 அகத்திணையியல் 2 புறத்திணை யியல் 3 களவு இயல் 4 கற்புஇயல் 5 பொருள் இயல் 6 மெய்ப்பாட்டு இயல் 7 உவம இயல் 8 செய்யுள் இயல் 9 மரபு இயல்.

இவ்வாறு மூன்று பெரும்பிரிவுகளைக்கொண்ட தொல்காப்பியத்திற்குப் **பனம்பாரனார்** என்பவர் முன்னுரை (பாயிரம்) கூறியுள்ளார். அதுவருமாறு

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம் தொகுத்தோனே; போக்குஅறு பனுவல்
**நிலம் தரு திருவின் பாண்டியன்** அவையத்து
அறம்கரை நாவின் நான்மறை முற்றிய
**அதங்கோட்டு ஆசாற்கு** அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
**தொல்காப்பியன்** எனத்தன் பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

இம்முன்னுரைப்பாவால் அறியப்படும் செய்தி களாவன:

தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாடு வடக்கே திருவேங்கடத்தையும் (திருப்பதியையும்) தெற்கே குமரிக்கடலையும் எல்லையாகக் கொண்டிருந்தது. கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லையாக இருந்தன. (கிழக்கில் உள்ள வங்காளக்குடாக்கடல் குணகடல் எனவும், மேற்கில் உள்ள கடல்- அரபிக்கடல்-குடகடல் எனவும் அழைக்கப்பட்ட தாகப் பிற இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்) இப்பகுதியுள் செந்தமிழே வழங்கியது. மலையாளம், கன்னடம், குடகு போன்ற மொழிகள் அன்று தோன்றில. (திருப்பதிக்கு வடக்கே தமிழின் கிளை மொழியான தெலுங்கு வடுகு என்ற பெயரோடு உருப்பெறத் தொடங்கியுள்ளது). தமிழ் வளமுற்ற செந்தமிழாகவே வழங்கியுள்ளது; உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனப் பிரிவுபடுத்தும் செப்ப முற்ற நிலையைப் பெற்றிருந்தது. தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என முப்பெரும் பிரிவுக ளாக ஆராயப்பட்டது. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட பல நூல்கள் இருந்துள்ளன.

தொல்காப்பியர் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட அரசன் **நிலம் தரு திருவின் பாண்டி யன்** ஆவான். அவனுடைய அரச அவையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆராயும் நிலை இருந்துள் ளது. அரச அவையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆராய்ந்தனரேயன்றித் தமக்கெனச் **சங்கம்** அமைத் துக்கொண்டிலர். ஆகவே தொல்காப்பியர் சங்க காலத்திற்கு முற்பட்டவர் எனத் தெளியலாம். சங்ககாலம் என்பது தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னும் கி.பி. இரண்டாம் நூற்றூண்டுக்கு முன்னு மாகும்.

தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டபோது அவைத் தலைவராய் இருந்தவர் அதங்கோட்டு ஆசான் என்பவராவார். அதங்கோடு என்னும் ஊர் இப்பொழுதும் குமரி மாவட்டத்தில் உள்ளது. அவ்வூரைச் சேர்ந்த ஆசான் எனக் கூறப்பட்டுள் ளது. இன்றும் அப்பகுதிகளில் ஒரு துறையில் வல்லுநரை **ஆசான்** என்றே அழைக்கின்றனர். அதங்கோட்டு ஆசானின் இயற்பெயர் தெரிந்திலது.

தொல்காப்பியம் இயற்றிய பின்னரே தொல் காப்பியன் என நூலாசிரியர் அழைக்கப்பட்டுள் ளார். தொல்காப்பியன் எனப் பெயர் தோன்றிய பின்னர் அவர் இயற்பெயர் வழக்காறு அற்றுவிட் டதுபோலும். தொல்காப்பியர் தமிழ் நூல்களையும் 'ஐந்திரம்' என்ற வடமொழி நூலையும் முற்றக்கற்று புகழ்மிகுந்த அறவொழுக்கப் பெரியோராய் வாழ்ந் துள்ளார்.

இன்னோரன்ன வரலாறு தெரிவிக்கும் இப் பாயிரப் பாடலை ஒவ்வொரு தமிழரும் நினைவில் கொண்டு போற்றுதல் வேண்டும். (தொடரும்)

---

## 'குறள்நெறி' வாழ்த்து

1 நாடும் மொழியும் நல்லவர் உள்ளமும்
தேடும் அறிவும் தெளிவு பெற்றோங்க
பீடு நடையுடன் குறள்நெறி
ஏடு(நீ) வளர வாழ்த்து கின்றேன்!

2 அரசியல் அறிவும் இலக்கியச் சுவையும்
வீரர் வாழ்வும் வித்தகர் காப்பியம்
சேர விளங்கி குறள்நெறி
கரங்கள் தோறும் திகழ்ந்து வாழீ!

பாபநாசம் — அன்பன்
தஞ்சை — நா. சாமிநாதன்'

(தொடர்கதை)

# 'பூங்கோதை'

வித்துவான்
மு. இராமகிருட்டினன் எம்.ஏ., பி.டி.

(15-1-64 இதழின் தொடர்ச்சி)

சிவக்கொழுந்து தம் தங்கை மகளுக்குத் தம் தாயாரின் பெயரையே இட்டு அவளைப் பூங்கோதை என அன்புடன் அழைத்து வந்தார். செங்கமலத்தின் கொடுமை ஒருபுறம் இருந்தாலும், சிவக்கொழுந்தினுடைய மாறா அன்பும், காளியம்மையின் பாதுகாப்பும் பூங்கோதைக்குத் துணையாக அமைந்தன. காளியம்மைக்குக் குழந்தையிடம் உண்மையிலேயே நல்லபற்று இருந்தாலும் 'செங்கமலத் தம்மையாரின் கண் சிவக்கும்' என்று, அவளுக்கு எதிரில் பூங்கோதையைச் சினந்தும் மருட்டியும் வந்தாள்.

பூங்கோதைக்கு யாண்டு ஐந்து முற்றுப் பெற்றது. சிவக்கொழுந்து அவளைத் தம்மக்களோடு பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். செங்கமலத்திற்கு இத்திக்கற்றக் குழந்தையை தன் செல்வ மக்களோடு ஒத்த நிலையில் வைத்து வளர்ப்பது கொஞ்சமும் பிடிக்கவில்லை என்ன செய்வது! தன் கணவனை மீறித் தான் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருந்தாள்.

சிவக்கொழுந்திற்குத் தலைமகன் காளையப்பனுக்கு யாண்டு பன்னிரண்டு பிள்ளை 'கொழு கொழு' வென்று அழகாகஇருப்பான். யாரும் அவனைக்கடிந்துரைப்பதில்லை. அவன் எத்துணைக் குறும்பு செய்தாலும் தட்டிக் கேட்பாரில்லை. சிவக்கொழுந்து ஏதாவது சொல்லத் தொடங்கினால் செங்கமலம் சிணுங்கத் தொடங்கிவிடுவாள் 'ஊரிலுள்ள யாருமற்ற கழுதைகளுக்கெல்லாம் இந்த வீட்டில் செல்வமாக வளர இடமிருக்கிறது. ஆனால் என்னுடைய செல்வ மகனைக் கண்டால் தான் எல்லாருக்கும் கண் கரிப்பாக இருக்கிறது. எல்லாம் என் தலைவிதி'' என்று ஓலமிடுவாள்.

காளையப்பன் பள்ளிக்குச்சென்று ஏழாண்டுகளாயின படிப்பது எப்படியிருந்தாலும், ஓராண்டிலும், அவன் தேர்ச்சியில் தவறியதில்லை. அவனுடைய அம்மாவுக்கு இதைவிட என்ன பெருமை வேண்டும்? சிவக்கொழுந்திற்கு அவனுடைய வெற்றி வியப்பாகத்தானிருந்தது. அந்த ஊரிலிருந்த உயர் தொடக்கப் பள்ளிக்கு, சிவக்கொழுந்துபுரவலரும் தாளாளரும் ஆவர்; அவருடைய செல்வப் புதல்வன் தேர்வில் வெற்றி பெறாவிட்டால், அப்பள்ளியின் தலைமையாசிரியர்க்கு அமைதி இருக்குமா? எப்படியோ காளையப்பன் ஒவ்வோராண்டும் மேல் வகுப்பிற்குச் சென்று கொண்டிருந்தான்.

காளையப்பனுக்கு மூன்றாண்டிற்கு இளையவள் பூஞ்சோலை மூன்றாவது குழந்தைக்கு அப்பொழுது யாண்டு ஏழு நிறைவுற்றிருந்தது. அவர் அக்குழந்தையைத் தன் தங்கை சண்பகத்தின் பெயரால் அழைத்து வந்தார் ஆனால் அந்த அற்பாயுளின் பெயரையா தன் மகளுக்கு வைப்பது என்று கருதிய செங்கமலம் அவளை 'வண்ணக்கிளி' என்றே அழைத்து வந்தாள்.

குழந்தைகள் இயல்பாகவே எத்தகைய தன்மையுடையவர்களாக இருந்தாலும், வளர்ப்பிற்கு ஏற்றவாறும் மாறுபடுவார்களென்பது யாவரும் அறிந்த ஒன்று. சிவக்கொழுந்தின் மகளிர் இருவரும் பூங்கோதையை 'திக்கற்றக் குழந்தை' என்று அருவருப்புடனேயே நடத்தி வந்தனர் தம்மியல்பாகச் சிறுவர் சேர்ந்து பழகினாலும். செங்கமலம் தம் குழந்தைகளை வேறாகப் பிரித்து விடுவாள்.

பூங்கோதையின் துன்பச்சூழல் நாளுக்கு நாள் மிகுவதாயிற்று. சிவக்கொழுந்திற்கு வாணிகத்திலும், பயிர்த்தொழிலிலும் வளங்குறைவதாயிற்று இத்தீய பயனெல்லாம் பூங்கோதையின் கெட்டவேளைதான் என்று செங்கமலம் சுட்டிக்கொண்டே வந்தாள். மனையாளின் தீய எண்ணமும் கொடிய செயல்களும், இரக்க மின்மையும் சிவக்கொழுந்தை வருத்தின.

நாளடைவில் அவரது உளநோய் உடல் நோய்க்கு அடிகோலியது மருத்துவர்களெல்லாம் 'நோய் ஒன்றும் இல்லை ஓய்வும் உள்ள அமைதியும் இருந்தால் சரிப்பட்டு விடும்' என்றார்கள் ஆனால் சிவக்கொழுந்திற்கு நம்பிக்கை இல்லை. தம் மனைவியின் ஆரவாரப் போக்கும், குழந்தைகள் வளர்க்கும் பண்பாடற்ற முறையும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு இடையூறு பயக்குமே'— என ஏங்கினார். பூங்கோதையின் வழியற்ற நிலையை எண்ணி வருந்தினார். தம்இல்லத்தில் பணி புரிந்து வந்த காளியம்மை, கண்ணம்மாள், கருப்பணன் ஆகியவர்களிடம் தமக்குப் பின்னால் தம் பிள்ளைகளோடு வைத்துக் கவனித்துக்கொள்ளுமாறு கூறினார். சிவக்கொழுந்து நாளுக்கு நாள் நலிந்து வந்தார். அப்பொழுது கூதிர்காலம். வெளியில் சென்று உலவுவதற்கு முடியாது மழையும் அடிக்கடி பெய்து கொண்டிருந்தது. கரிய முகிற் கூட்டம் வானத்தை மறைத்து எங்கும் இருள் கவியச் செய்தது. சிவக்கொழுந்து படுத்திருந்த அறையில் செங்கமலமும் குழந்தைகளும் கண்ணீர் வடித்த காட்சியோடு நின்றுகொண்டிருந்தனர். தேம்பிக் கொண்டிருந்த பூங்கோதையைச் சுட்டிக் காட்டிய வண்ணமாய்த் தம் குழந்தைகளையும் அருகணைத்துக் கொண்டார் சிவக்கொழுந்து. அவர் வாயினின்றும் பேச்சு எழவில்லை. சிவக்கொழுந்து இறுதியாகத் தம் கண்ணை மூடிவிட்டார்.

இயல்–2.

## பூங்கோதையின் நிலை.

சிவக்கொழுந்து மண்ணுலக வாழ்வை நீத்து யாண்டுகள் இரண்டு கடந்தன. பூங்கோதை மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். வண்ணக்கிளி இரண்டாண்டிற்கு மேல் மூத்தவள். என்றாலும் அவளும் மூன்றாம் வகுப்பிலேதான் படித்துக்கொண்டிருந்தாள். கழுத்தளவில் அலைந்து சுருண்டு விழும் அவளுடைய கரிய கூந்தலும், காதளவோடும் கரிய பெரிய கண்களும், குறும்புப்பார்வையும், காண்போருள்ளத்தைக் கவர்வதாக விருந்தன. அவளுடைய சிவந்த மேனிக்கு அவளுடைய ஆடையும், அணிகலன்களும் அழகுக்கு அழகு செய்வனவாகவே அமைந்தன. ஆயினும், அறிவுக்கூர்மையிலும், ஆணவத்திலும் அவள் தன் தாயையே ஒத்திருந்தாள்.

பூங்கோதை அருவருக்கத்தக்க வடிவ அமைப்பு உள்ளவளாக இல்லையெனினும், வண்ணக்கிளியை நோக்க அவள் கவர்ச்சி இல்லாதவளாக இருந்தாள். போதுமான கவனிப்பின்மையும், உணவுப் பற்றாக்குறையும், செந்தீப் பொறி பறக்கும் செங்கமலத்தின் நோக்கும்,வசைமாரி பொழியும் அவளுடைய வாழ்த்தும் பூங்கோதையின் உடல் வளர்ச்சிக்கு ஊறு பயக்காமல் உறுதியா பயக்கும்? மேலும் காளையப்பனின் குறும்புத்தனத்திற்கும், வண்ணக்கிளியின் எள்ளல் மொழிகளுக்கும் இடையில் பூங்கோதை சிக்கித் தவித்தாள்.

பூஞ்சோலை வண்ணக்கிளிக்கு மூத்த பெண் அவள் படிப்பிலும், பின்னல் வேலை முதலியவற்றிலும், இசையிலும் சற்று விருப்பமும் தேர்ச்சியும் உடையவள். ஆகையால் அவள் தன்னுடைய நேரத்தைப் பெரும்பாலும் தனியாகவே செலவிடுவாள். அவளால், பூங்கோதைக்கு அத்துணை இடையூறு கிடையாது. என்றாலும், பூஞ்சோலை தன்னை வருத்து ஒதுக்குவதே பூங்கோதைக்குப் போதிய வருத்தத்தைத்தந்தது.

★ ★ ★

சிவக்கொழுந்து உயிர் துறந்த அதே கூதிர்காலம். காலை வேளையில் பூங்கோதை சற்று நேரம் தனியாக வெளியில் சென்று தம் வீட்டிற்கு அருகே இருந்த பூந்தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பினாள். அன்று விடுமுறை நாள்; ஆகையால் செங்கமலம் நடுப்பகற்கு முன்னரே தன் குழந்தைகளோடு சேர்ந்து உணவருந்திவிட்டாள். பின்னர் காளியம்மை பூங்கோதைக்குத் தனியாகச் சோறிட்டு வைத்தாள். பூங்கோதை, தன் கவனத்தை வேறு வகையில் செலுத்தியவளாய் அயர்ச்சியோடு உண்டு கொண்டிருந்தாள்.

(தொடரும்)

# வேண்டுகோள்

படைப்புக் காலந்தொட்டு விளங்கிவரும் பழங்குடியினர் தமிழர் ஆவர். தமிழர் தம் சிறப்புக்குக் காரணம் மொழியேயாகும். தமிழ்மொழி தேனூறுபெருக்கெடுத்தாற் போன்ற இயல்பினது; முப்பழச் சுவைக்கும் முதிர் சுவையுடையது; ஊன் கலந்து உயிர் கலந்து ஒன்றவைப்பது; இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் எடுத்துக்காட்டி எதிர்காலத்தை வாழவைப்பது; அரசியல் முறையும் ஆய்வியல் தெளிவும் தெளிவும் செறிந்தது; கலைநலனும் கடமையுணர்வும் பின்னியது; உலகெல்லாம் ஒரு குடியாக்கும் உயர்நலம் உடையது; மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டும் வனப்பினது.

இத்துணை நலங்களும் செறிந்திருக்கும்காரணத்தால் தமிழன் என்று சொல்லிக்கொள்வதிலே ஒரு பெருமையுண்டு; தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், தேவார திருவாசகம் தோன்றிய மண்ணிலே தோன்றியவன் என்று பெருமிதம் கொள்ள உரிமையுண்டு. உலகம் நாகரிகம் இன்னதென அறியாதிருந்த காலத்திலேயே அதன் உச்சிக் கிளையில் நின்றுஒளிர்ந்தவர் எம்முன்னோர் என இறும்பூதெய்தும் வாய்ப்பு உண்டு; அடுக்களை, அங்காடி. ஆலயம், ஆட்சி மன்றங்கள் ஆகிய அனைத்திடங்களிலும் தமிழ்மொழியே தனிக்கோல் ஓச்சியது என்று மகிழும் பேறும் உண்டு; ஆனால் இக்காலநிலைமையோ..?

"தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை" என்று இரங்கும் நிலைமை உள்ளது பேச்சிலே தமிழ் இல்லை; எழுத்திலே தமிழ் இல்லை; ஊர்ப்பெயர், தெருப்பெயர். இல்லப் பெயர்; மக்கட்பெயர்; வணிக நிலையப் பெயர் இவற்றிலே தமிழ் இல்லை; விளம்பரப் பலகைகளிலும் சுவரொட்டிகளிலும் தமிழ் அறவே இல்லை; தமிழ் மண்ணிலே பிறந்து. தமிழ் மண்ணிலே வளர்ந்து. தமிழ் மண் தந்த உணவையே உண்டுவரும் தமிழரும், "கல்லூரியில், தமிழ பயிற்றுமொழி ஆதற்குத் தகுதியுண்டா? அரசியல் முதலாயவற்றைப் பயிற்றுதற்காம் செறிவு உண்டா?" என்று கேட்கும் இழிநிலையுண்டு.

இந்நிலையில் மொழியை வைத்துக்கொண்டு பழம் பெருமை பேசுவதில் பயனுண்டா? தமிழன்பீர், மொழியே அழியாச்செல்வம்; மொழியை அழிப்பதோ அழிப்பதைப் பார்ப்பதோ அம்மொழியுடைய மக்களின் ஆண்மைக்கு அடுக்காது. மொழியே வழி; அவ்விழியிலே கல்லும் கரடும். முள்ளும் முடலும். நச்சும் நாற்றமும் உறவிடலாகாது மொழியே விழி: அவ்வழியிலே தூசும் தும்பும். புண்ணும் பொடியும் படவிடலாகாது "மொழியைக் காத்தவர் விழியைக் காத்தவர்; மொழியைச்சிதைத்தவர் விழியைச் சிதைத்தவர்; மொழிக்கும் விழிக்கும் வேற்றுமை இல்லை; மொழியே விழி விழியே மொழி" என்று கிளர்ச்சிகொள்ளுங்கள். 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று அறைகூவுங்கள் "தமிழ் வாழ்க, தமிழ் வளர்க, தமிழ் ஓங்குக. தமிழ் உயர்க" என்று வாழ்த்துங்கள்; "தமிழில் எழுதுக; தமிழில் பேசுக; தமிழில் பெயரிடுக; தமிழில் பயில்க" என்று முழங்குங்கள். மொழி வாழ்வுக்கு முழு முயற்சி செய்யுங்கள்

மொழியைக் காக்கவென்றே எழுந்தது தமிழ்க்காப்புக் கழகம்: தமிழன்புடைய. தமிழ்ப் பற்றுடைய அனைவருக்கும் ஓரமைப்பாக இயங்கி வருவது தமிழ்க்காப்புக் கழகம், கட்சி அரசியல், சமயம், சாதிப் பிணைப்புகளற்று இயங்குவது தமிழ்க்காப்புக்கழகம்; நல்ல தமிழில்எழுத நல்ல தமிழில் பேச. நல்ல தமிழ் நடைமுறைகளை நாடெங்கும் பரப்ப நற்றமிழ் நடைமுறைக்கு ஊறு விளைப்பவற்றைத் தடுக்கக்கிளர்ந்தது தமிழ்க்காப்புக்கழகம்; இக்கழகத்தில் உறுப்பினராகச் சேருங்கள்: உங்கள் நண்பர்களை உறுப்பினராகச் சேர்க்க முயலுங்கள், தமிழ்த்தொண்டு புரிய முனைந்தெழுங்கள்! உங்கள் முயற்சி வாழ்க!

தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்!

தமிழர் வாழ்ந்தால் தமிழ்நாடு வாழும்!

தமிழ் வாழ்வே தமிழர் வாழ்வு!

**தமிழ்க் காப்புக் கழகம்.**

**திருநகர் : : மதுரை-6**


## தென்னகத்தின் தன்னிகரில்லாத் தனிப்பயிற்சிக் கல்லூரி

## மதுரை டுடோரியல் காலேஜ்

XI Std, P. U. C.
Matric, B. A., B. Sc., B. Com.

வகுப்புகள் நடைபெறுகின்றன.

மகளிர்க்குத் தனிவகுப்பு. விடுதி வசதி உண்டு.

நகவல்: **M. T. C.**
ஜி. கே. எஸ். ரெஸ்ட்ஹவுஸ்
(காலேஜ் ஹவுஸ் அருகில்)
டவுன்ஹால் ரோடு, மதுரை-1

கு. இளஞ்சேரன், M.A.,
முதல்வர்.


ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலானர் கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.